கொசப்பட்டியில் பாம்பாற்றின் குறுக்கே அணைக்கட்டு.

* 304 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள பாம்பாற்றின் குறுக்கே கொசப்பட்டி என்னுமிடத்தில் கட்டப்பட வேண்டிய அணைத்திட்டம் எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்; உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பாற்றின் குறுக்கே கொசப்பட்டி அணைக்கட்டுத் திட்டம் எப்போது தொடங்கப்படவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போது உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது என்று சொன்னேன். இத்திட்டத்திற்காக ரூ. 4.5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த உள்ளூர் அதிகாரிகள் முடிவுக்குப் பிறகு இது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

Construction of dam in Varishnadu hills.

* 305 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to construct a dam in the Varishnadu hills area in Ramanathapuram district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் பகுதியிலே இல்லாவிட்டாலும், மதுரைப் பகுதியிலே அணை கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாக நான் பத்திரிகையில் படித்தேன். அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இல்லை என்றால் இனிமேல் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இக்கேள்வி வைகை வழித் திட்டத்தைப் பற்றியது. கிராம விவசாயிகள் சார்பாக இத்திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசு தலைமை ஆலோசனை பொறியாளர் அவர்களை இதுபற்றி ஒரு ரிப்போர்ட் கேட்டிருக்கிறேன். அந்த அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

வாடிப்பட்டிக்கருகிலுள்ள கருப்பமணியக்காரன் கண்மாய்.

* 306 வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை வட்டத்தில், வாடிப்பட்டிக்கருகிலுள்ள கருப்பமணியக்காரன் கண்மாயைத் தூர் வாரச் செய்து, ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.